திரு. சி.எச். சேகர்: இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள எந்த ஒரு தொழிற்சாலையிலும், தொழிற்சங்கம் தொடங்க அனுமதி அளிப்பது இல்லை. இதனால், தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளுக்குக்கூட போராட முடியவில்லை. வரி விலக்கு, தடையின்றி மின்சாரம் போன்ற சலுகைகளைப் பெறும் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் **

முற்பகல் 9-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு மாத காலத்தில் இதற்கு நான் பலமுறை பதில் சொல்லிவிட்டேன். பன்னாட்டுக் கம்பெனிகள் மட்டுமல்ல; உள்நாட்டுக் கம்பெனிகளும் வெளி மாவட்டங்களில் ரூ.250 கோடியும், சென்னையைச் சுற்றியிருக்கிற மாவட்டங்களில் ரூ.350 கோடியும் முதலீடு செய்வார்களேயானால், அவர்களுக்கு அந்தச் சலுகை உண்டு என்பதைப் பலமுறை இந்த அவையில் சொல்லியிருக்கின்றோம். திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் பன்னாட்டுக் கம்பெனிக்கு ஏதோ தடையில்லாத மின்சாரம் போன்ற பல சலுகைகள் வழங்குவதுபோல் சொல்கிறார். உள் நாட்டுக் கம்பெனிக்கும் அந்தச் சலுகைகள் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரிச் சலுகை தருவதாகச் சொல்கிறார். வரிச் சலுகை தருவது என்றால், வரியை முழுமையாகத் தள்ளுபடி செய்வதில்லை. வரியை அவர்கள் காலம் தாழ்த்திக் கட்டலாம். அதாவது 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.